நாள். 01.07.2026
அசல் வழக்கு எண்.74/2025
வா.சா.1 நம்பி
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
<u>குறுக்கு விசாரணை</u>

எனது தாத்தா பெயர் கொம்பையா தேவர் என்றால் சரிதான். கொம்பையா தேவருக்கு பேச்சிமுத்து தேவர் மற்றும் எனது தந்தை வாரிசுகள் என்றால் சரிதான். கிழமேல் தெருவிற்கு வடபுறம் சர்வே எண் 174/4 உள்ளது என்றாலும் அதற்கு மேல்புறம் பேச்சிமுத்து தேவர் மகன் ஆறுமுகம் வீடு உள்ளது என்றால் சரிதான். பேச்சிமுத்து தேவர் மற்றும் எனது தந்தைக்கு ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் மேற்படி இடத்தில் ஆறுமுகம் வீடு கட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது, இடம் காலியாக இருந்தது வீடு கட்டியுள்ளார். கிழமேல் ரோட்டிற்கு வடபுறம் உள்ள கதவு எண் 2ஏ உள்ள வீட்டிற்கு தென்புறம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு வடபுறமும், கீழ்புறமும் வட கால்வாய் உள்ளது என்றால் சரிதான்.

1980 ம் வருடம் மாடசாமி தேவர் என்பவரிடம் எனது தாத்தா கொம்பையா தேவர் கிரையம் பெற்றுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தா கொம்பையா தேவர் கிரையம் பெற்ற கிரைய ஆவண எண் 1078/1980 எல்கைக்கு உட்பட்ட இடம் தான் தற்போது என்னுடைய வீடு உள்ளது இடம் என்றால் எனக்கு தெரியாது. கதவு எண் 2ஏ உள்ள வீட்டில் என்னுடைய இருமகன்களும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் 1 என்றால் சரிதான். என்னுடைய பிராதில் வாதி முகவரியில் கதவு எண் 149ஏ/2 குடியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. மேற்படி கதவு எண் 149ஏ/2 வீடு எங்குள்ளது என்றால் தெருவிற்கு தென்புறம் உள்ளது.

அப்படி ஒரு முகவரி கிடையாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆன வீட்டு வரி ரசீது எதன் அடிப்படையில் வாங்கப்பட்டது என்றால் மாட்டுதொழுவம் உள்ளது என வாங்கினேன். மேற்படி இடத்தில் எனது மகன் குடியிருக்கும் வீடு உள்ளது என்றாலும் வா.சா.ஆ 1 அதற்கான ரசீதுகள் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக மாட்டுதொழுவம் உள்ளதாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் தான் கதவு எண் 1 உள்ள வீட்டில் குடியிருக்கிறார்கள் என்றாலும் அதனால் தான் அனைத்து ஆவணங்களிலும் பிரதிவாதிகளின் முகவரியில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்த 16.12.2005 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் என் தந்தை சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தையின் கையொப்பம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. 1 ம் பிரதிவாதி பெயரில் 2010 ம் ஆண்டு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது என் தந்தை வாய்மொழியாக ஆளுக்கு பாதி என பங்கு வைத்தது மட்டும் தான் தெரியும். அவ்வாறு என் தந்தை வாய்மொழியாக பங்கீடு செய்யவில்லை என்றாலும் செய்து கொடுத்திருந்தால் ஒத்தி பண பற்று ரசீது மற்றும் கிரைய ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. எனது தாத்தா கொம்பையா தேவர் மற்றும் என் தந்தை ஆறுமுக தேவர் பெயரில் உள்ள வயல்கள் பங்கீடு செய்யப்பட்டு விட்டதா என்றால் முன்பே பங்கு வைத்தார்கள்.

மேற்படி வயல்களில் 1 ம் பிரதிவாதியின் கணவர் கொம்பையாவுக்கும் பங்கு உரிமை உள்ளது என்றால் ஏற்கனவே எனக்கு மேற்கும் அவருக்கு கிழக்கும் பங்கு வைக்கப்பட்டு இருந்தது. நான் எனது சகோதரர் கொம்பையா மற்றும் சகோதரி மாரியம்மாள், லெட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து மாலையம்மாள் என்பவருக்கு அடமானம் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான், பங்கு வைத்ததற்கு பிறகு தான் எழுதிக்கொடுத்தோம். மேற்படி ஆவணம் ஏற்படும் சமயத்தில் பங்கு வைக்காததால் தான் அனைவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்திற்கு பிறகு எனது சகோதரருக்கு தெரியாமல் மாலையம்மாள் என்பவருக்கு அடமான மேடுஓவர் ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால் என் தந்தை இருக்கும் பொழுது எனக்கு பிரித்து கொடுக்கப்பட்ட சொத்தை தான் அடமான மேடுஓவர் செய்தேன்.

நான் சொல்லும் ரூ.100/- பத்திரம் யார் எழுதிக்கொடுத்தது என்றால் என் சகோதர, சகோதரிகள் அனைவரும் அவர்களுக்கு சம்மதம் இல்லை என எனக்கு தான் சொத்து எனவும் எழுதிக்கொடுத்தார்கள். மேற்படி

ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அவ்வாறு ஆவணம் எதுவும் கிடையாது என்றாலும் இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றாலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் தான் கேட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல, சொத்து எனக்கு பாத்தியப்பட்டது தான்.

கிழமேல் ரோட்டிற்கு வடபுறம் உள்ள கதவு எண் 2ஏ உள்ள வீட்டிற்கு மின்இணைப்பு கிடையாது என்றால் சரிதான். எதற்காக மின் இணைப்பு பெறவில்லை என்றால் இனி தான் பெறவேண்டும். மேற்படி இடத்திற்கு முறையான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லாததாலும் எனது தாத்தா கொம்பையாதேவர் பெயரில் உள்ளதாலும் மின் இணைப்பு பெறவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி தாக்கல்செய்த எதிர்வழக்குரை விவரங்களை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிகளின் உறவினர் என்பதால் அவர்கள் என்னை தபசில் சொத்தில் இருக்க அனுமதித்தார்கள் என்றாலும் அவருக்கு எதிராகவே நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல, 15 வருடங்களாக தபசில் சொத்தில் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன்.

15 வருடங்கள் அனுபவம் செய்து வருவதை காட்டும் ஆவணங்கள் ஏதாவது வைத்துள்ளேனா என்றால் ரசீது தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் அனைத்தும் 2020, 2022, 2024, வருடங்களை சேர்ந்தது என்றாலும் அதற்கு முன்பு இருந்தே நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். வா.சா.ஆ 1 ஆவணத்திற்கும் கதவு எண் 1 வீட்டிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் 1 என ஏற்கனவே நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் தாவா சொத்தில் 15 வருடங்களாக குடியிருந்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள எனது சகோதரர் வீட்டிற்கு அடுத்தார் போல் பேச்சியமுத்து என்பவரின் உறவினர்கள் இருந்தார்கள் என்றால் முன்பு இருந்தார்கள் தற்போது விற்பனை செய்துவிட்டார்கள். 1

ம் பிரதிவாதி கிரையம் பெற்றது பேச்சிமுத்து பாக சொத்துக்கள் என்றாலும் பேச்சிமுத்து என்பவருக்கு அவருடைய குடும்ப பாகப்பிரிவினை படி கிடைத்த சொத்து என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் அனுபவம் கிடையாது என்றாலும் அதை அபகரிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. ( சாட்சி தானாக பேச்சிமுத்து என்பவரிடமிருந்து என் தந்தை 50 ஆண்டுகளுக்கு முன்பே வாங்கிவிட்டார் என கூறினார்). என்னுடைய தந்தை அடமானம் தான் பெற்றுள்ளார் என்றாலும் கிரையம் பெறவில்லை என்றாலும் மேற்படி பேச்சிமுத்து என்பவரிடம் ஒத்தி பணத்தை பெற்றுக்கொண்டு ஒத்தி பணபற்று ரசீது கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுப்படி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.